# திருக்கடிகை
## (கடிகாசலம்)

**அறிந்தும் அறியாதவை :** சோளிங்கபுரம் என்றால் பெரியோர் பலருக்கு நன்கு தெரியும். ஒரு முறை அவ்வூருக்குச் சென்று பகவானை ஸேவித்தவர்கள், மீண்டும் ஒருமுறை அவ்வூரை நினைத்தால், நரசிம்மர் எழுந்தருளி இருக்கும் பெரியமலையும் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ள சின்னமலையும் மனக்கண்முன் வந்து தோன்றி மகிழ்விப்பது இயற்கை! இவ்வாறு காண்பவர்கள் பெரும் பாக்கியசாலிகள்! சோளிங்கபுரத்தைக் 'கடிகை' என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார். இவ்வூரிலிருக்கும் மலையே 'கடிகாசலம்' எனப்படுகிறது.

## ஸ்தலசயனத்துறைவார்

'எந்தத் திவ்ய தேசத்திற்குச் சென்றாலும், அங்குப் பெருமானை ஸேவித்துவிட்டு, அவ்வூரிலேயே ஓரிரவு தங்கி இருக்கவேண்டும்' என்று பெரியோர் கூறுவர். ஆனால், இவ்வூருக்கு வருவோர், 'கணப்பொழுது' இங்கு வசித்தாலும் போதும்! அவர்களுக்கு மோட்சம் உறுதி! சோளசிம்ம ராஜபுரம் என்னும் பெயர், சோளஸிம்ஹபுரம் என்றாயிற்று. நாளடைவில் 'சோளிங்கபுரம்' என்றே மருவிவிட்டது! ஆனால், அக்காலத்தில் சோளிங்கபுரத்திற்கு இருந்த பெயர் 'கடிகாசலம்'. 'கடிகை' என்பதேயாம்.

**இதோர் அற்புதம் கேளீர்! :** திருவரங்கத்தில் நம்பெருமாளுக்கு 'விபீஷண ஆராதனம்' என்று ஒரு நாள் நடைபெறுகிறது! காஞ்சீபுரத்தில் ஸ்ரீ தேவப் பெருமாளுக்கு பிரம்மாராதனம் என்று ஒரு நாள் நடைபெறுகிறது! திருவரங்கனை விபீடணனும், காஞ்சியில் ஸ்ரீவரதராஜரைப் பிரம்மாவும் தினந்தோறும் ஆராதித்து (பூஜித்து) வந்தாகள் என்று பெரியோர்கள் கூறுவார்கள். அதுபோல், கடிகாசலத்தில்

(கடிகைமலையில்) உறையும் யோக நரசிம்மரை தினந்தோறும் 'ஸப்த ரிஷிகள்' ஆராதித்து வந்தார்கள் என்று கூறப்படுகிறது. அதற்கு அடையாளமாக இப்போதும் கடிகை மலைக்கு அருகில் இருக்கும் ஒரு குன்றுக்கு 'ஸப்தரிஷி மலை' என்று பெயர் வழங்கப்படுகிறது! பகவானை ஆராதிக்க வரும் ஸப்தரிஷிகளும் (ஏழு முனிவர்களும்) இந்த மலையில் தங்கிச் செல்வது வழக்கம் என்று அன்று முதல் இன்றுவரை கூறப்பட்டு வருகிறது.

**பிரம்ம தீர்த்தம் :** கடிகாசலத்தில் (சோளிங்கபுரம் மலையில்) பல புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன! அவற்றுள் பிரம்ம தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், சஞ்ஜீவி தீர்த்தம், ஸப்தரிஷி தீர்த்தம், லக்ஷ்மீ தீர்த்தம், சேஷ தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் புகழ் பெற்றவை. அவற்றுள் பிரம்ம தீர்த்தம் மிகச் சிறப்புடையது. இதைத் 'தக்கான்குளம்' என்று இப்போது கூறுகிறார்கள். இக்குளத்தில் நீராடினால் நோய்கள் நீங்கும்; இக்குளத்தின் பெயரைக் கேட்டாலே பேய், பிசாசுகள் நடுங்கும்; குளத்தைப் பார்த்தால் ஓடிவிடும். இக்குளத்தின் நீரைப் பருகுகிறவர்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ்வார்கள். சாலையிலிருந்து மிகவும் உயரத்தில் இருக்கும் இக்குளத்தில், மலையிலிருந்து ஓடிவரும் மருந்துப் பொருள் கலந்த மழைநீரே வந்து சேர்கிறது. இக்குளக் கரையில் ஸ்ரீதேவப் பெருமாள் எழுந்தருளி இருக்கிறார். மனிதப் பிறவி சிறந்திருக்கவேண்டுமாயின் ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் இக்குளத்தில் நீராடவேண்டும். தக்கான் குளத்தில் நீராடுவோர்க்கு ஸ்ரீ அழகியசிங்கரின் கடாக்ஷம் கிடைப்பது உறுதி!

**கோபுரவாசல் ஸேவை :** பிரம்மோத்ஸவ காலங்களில் பகவான் ஒரு நாள் கருட வாகனத்தின் மீது எழுந்தருளி ஸேவை ஸாதிப்பது வழக்கம். இந்த நிகழ்ச்சியைக் கருட ஸேவை என்றே கூறுவார்கள். பத்து நாட்கள் நடைபெறும் இப்பெருவிழாவில் கருடஸேவையும், திருத்தேர் மஹோத்ஸவ

வரும் மிகச் சிறப்புடையவை. காஞ்சி கருடஸேவை உலகப் புகழ் பெற்றது.

சோளிங்கபுரத்திற்கு அருகில் தொட்டாசாரியார் ஸ்வாமி என்பவர் எழுந்தருளி இருந்தார். அவர் சிறந்த ஞானி; அநுஷ்டான சீலர், அப்பய்ய தீட்சிதரை வாதத்தில் வென்றவர். அப்பய்ய தீட்சிதர் எழுதிய 'வேதாந்த தீபம்' என்ற அத்வைத நூலுக்கு பதிலளிக்கும் வகையில் 'சண்ட மாருதம்' என்ற கிரந்தத்தை அருளியவர் காஞ்சிபுரம் ஸ்ரீ தேவப் பெருமாளிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர்.

ஸ்ரீ தேவப் பெருமாளின் பிரம்மோத்ஸவத்தில் கலந்து கொள்வதற்காக ஆண்டுதோறும் சோளிங்கபுரத்திலிருந்து நடந்தே வருவார். வயது முதிர்ந்தது; உடல் தளர்ந்தது; நடையும் தள்ளாடியது. கருடோத்ஸவத்தில் ஸ்ரீ தேவப் பெருமாளை ஸேவிக்க வேண்டும் என்ற ஆசைமட்டும் வளர்ந்தது!

காஞ்சியில் வைகாச மகோத்ஸவம்! அன்று கருடஸேவை! தொட்டாசாரியார் ஸ்வாமியால் நடக்க இயலவில்லை; அதற்காகத் தயங்கவும் இல்லை! திருமாளிகையை விட்டுப் புறப்பட்டார்; தக்கான் குளத்திற்கு அருகில் வந்தார். 'இந்த நேரத்தில் கோபுரவாசலில் ஸ்ரீ தேவப் பெருமாள் கருட வாகனத்தின் மீது எழுந்தருளிக் கொண்டு இருப்பாரே! சென்று ஸேவிக்க இயலவில்லையே' என்று வருந்தினர். மனம் தளர்ந்து அங்கேயே வீழ்ந்தார்.

பல ஊர்களில் இருக்கும் அடியார்களை ஒன்று சேர்த்துக் காண்பதற்காகவே பகவான் உத்ஸவங்களை நடத்திக் கொள்கிறான்! அன்று தேவப்பெருமாள் பெருங்கூட்டத்தை ஒருமுறை கவனித்தார்; ஸ்ரீ தொட்டையாசாரியாரைக் காணவில்லை; அவர் வரவில்லையே என்று குறை! தன்னை ஸேவிக்க வந்தவர் "வரதா" என்று கூறிக் கொண்டே தக்கான் குளத்தினருகில்

வீழ்ந்து விட்டதை அறிந்தார் ஸ்ரீ தேவப் பெருமான்; அவருக்கு ஸேவை ஸாதிக்கத் தக்கான் குளத்திற்குச் சென்று விட்டார்.

இங்குக் கோபுரவாசலிலிருந்து பெருமான் எழுந்தருள வில்லை! 'தொட்டாசாரியாருக்கு ஸேவை ஸாதிக்கச் சென்றிருப்பதாக' அர்ச்சகர் வாயிலாகப் பகவான் தெரிவித்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கிருந்து பெருமான் திருவீதியில் எழுந்தருளத் தொடங்கினர்.

**பெரியோர் சொற்படி நட:** ஆழ்வார்களும் ஆசாரியர்களும் தம் நெஞ்சுக்கு அறிவுரை கூறுவார்கள். பகவானை நினைக்கச் சொல்லுவார்கள். அதன்படி அது செய்தால் 'நெஞ்சமே! நீ நல்லை நல்லை' என்று கொண்டாடுவார்கள். அவ்வாறு நடக்காவிட்டால் மனம் நொந்து பேசுவார்கள்.

எல்லாச் செயல்களையும் பகவான் எளிதில் செய்ய முடியாது! 'என்னைத் திருத்த அவன் அரும்பாடு பட்டான். நுண்ணிய அறிவைக் கொடுத்து ஆட்கொண்டான்; வெற்றி பெற்று விட்டான்! நெஞ்சே! நீ அவனை நினைத்தாயா? அவன் செய்த உதவியையும் மறந்தனை! நீ செய்ந்நன்றி இல்லாதவனே! செய்நன்றி மறந்தவனுக்கு உய்வில்லை! இப்படி இருக்கிறயே! இது என்ன துர்ப்புத்தி! இனியாவது நான் சொல்வதைக் கேள். நானும் மகிழ்வேன்; உலகமும் உன்னைக் கொண்டாடும்; கடிகாசலத்தில் இருக்கும் 'அக்காரக்கனி' எம்பெருமானை கணப்பொழுதேனும் நினை! நீ உய்வு பெறலாம்' என்று தன் நெஞ்சுக்கு அறிவுரை கூறுகிறர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்!

**சீரருளால் நம்மைத் திருத்தி நாமுன்னறியாக்**
**கூரறிவுந் தந்தடிமை கொண்டதற்கே — நேரே**
**யொரு கடிகையும் மனமே யுள்ளுகிலாய் முத்தி**
**தரு கடிகை மாயவனைத்தான்.**

(நூற்றெட்டு திருப்பதி அந்தாதி — 95)